புதிர்க்கதை

# என்னும் எண்ணும்!

விஸ்வநாத் - மணிகண்டன்

நண்பர்களான மல்லிகா, ராமு, சேகர், குமார், செல்வம், ராஜி அனைவரும் பள்ளியின் இடைவெளி நேரத்தில் அரட்டையடித்துக் கொண்டிருந்தபோது, அவர்கள் அமர்ந்திருந்த மேசையின்மேல் ஏதோ சவால்விடுவதுபோல் காகிதத்தாள் ஒன்றை மல்லிகா வைத்தாள்.


"மூன்று இலக்க எண் ஒன்றை இந்தக் காகிதத்தாளில் எழுது." என்று ராமுவிடம் கூறினாள்.


"அந்த எண்ணில் பூஜ்ஜியங்கள் இருக்கலாமா?" என சந்தேகத்துடன் கேட்டான் ராமு.


"தாராளமாக! மூன்று இலக்கங்கள் இருக்க வேண்டும், அவ்வளவுதான். ஆனால் என்னிடம் அந்த எண்ணைச் சொல்லாதே" என்றாள் அவள்.

"சரி, அடுத்தது என்ன?"

"அதை அப்படியே சேகரிடம் கொடு. சேகர், நீ அதே எண்ணை அதற்கு அடுத்தவாறே இன்னொரு முறை எழுது. இப்பொழுது







உன்னிடம் இருப்பது ஓர் ஆறு இலக்க எண், சரிதானே?"

"ஆமாம்", என்றான் அவன்.

"குமார், அந்த ஆறு இலக்க எண்ணை 7 ஆல் வகுத்து எழுது"

"என்ன விளையாடுகிறாயா? ஏதோ ஓர் எண்ணை எடுத்துக்கொண்டு அதை 7ஆல் சரியாக வகுக்கமுடியுமா என்ன?" என்று குழப்பத்துடன் கேட்டான் குமார்.

"செய்துதான் பாரேன். இதை நிச்சயம் வகுக்க முடியும்." என்று உறுதியாகக் கூறினாள் மல்லிகா.

சில நிமிடங்களில் கணக்கிட்டபின், வியப்படைந்த குமார், "ஆமாம் வகுக்க முடிகிறது, ஆனால் எண்ணைப் பார்க்காமலே உனக்கெப்படித் தெரிந்தது?" என்றான்.

"வீண்பேச்சிற்கெல்லாம் இப்போது இடமில்லை. 7ஆல் வகுத்த விடையை



செல்வத்திடம் கொடு." என்றாள் பரபரப்புடன் மல்லிகா.

"செல்வம், நீ அந்த விடையை 11ஆல் வகுத்து, ராஜியிடம் கொடு."

குமாரின் விடையை 11ஆல் சரியாக வகுக்க இயல்கிறது என்று கண்டறிந்தான் செல்வம். கிடைத்த விடையை ராஜியிடம் கொடுத்தான்.

"சரி, ராஜி, உனக்குத்தான் மிகப்பெரிய பொறுப்பு. செல்வத்தின் விடையை 13ஆல் நீ வகுக்க வேண்டும்" என்றாள் மல்லிகா.

"பொறு, 7ஆலும், 11ஆலும் ஏதோ வகுக்கப் பட்டுவிட்டது என்பதனால் அடுத்து 13ஆல் வகுக்க முயல்வது உனக்கு அகலக்கால் வைப்பதுபோல் தோன்றவில்லை?" என்று



தயங்கினாள் ராஜி.

"அதான் பெரிய பொறுப்பு என்று சொல்லி விட்டேனே."

"சரி, முயற்சி செய்கிறேன்."

"ஆ, என்ன அதிசயம், முடிகிறதே! இன்றைக்கு உன் அதிர்ஷ்ட நாள் போலிருக்கிறது!" என்றாள் ராஜி.

"உன் விடையை ராமுவிடம் கொடு." என்றாள் மல்லிகா, புன்சிரிப்பை அடக்கிக்கொண்டு.

ராஜி கொடுத்த எண்ணைப் பார்த்த ராமுவிற்குப் பேச்சு வருவதற்கே மிகுந்த நேரம் ஆயிற்று.

சுதாரித்துக்கொண்டவன், "இது என்ன சூழ்ச்சி? நான் முதலில் எழுதிய மூன்று இலக்க எண் உனக்கு எப்படித் தெரிந்தது?" என்றான் ராஜியைப் பார்த்து.

உங்களுக்கான புதிர்: ராமுவின் ஆச்சரியத்திற்கு விளக்கம் அளிக்கமுடியுமா?

மேற்கண்ட கதையில் சொல்லியிருப்பதை எல்லாம் சோதனையின்றி நம்பிவிட வேண்டாம். நீங்களும் ராமுவைப்போல் ஒரு மூன்று இலக்க எண்ணைத் தேர்ந்தெடுத்து மல்லிகா கூறிய செயல்முறையை செயல்படுத்திப் பார்க்கலாமே!

விடையறிய பக்கம் 17க்குச் செல்லுங்கள்